Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

PRGI NO: TNBIL/25/A3556

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 27 | வியாழக்கிழமை Thursday | 27.11.2025 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ஈரோடு மாவட்டத்தில் 790 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்





தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு இன்று நடைபெற்ற அரசு விழாவில் பங்கேற்று 790 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார். 23 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில் பேசிய மு.க.ஸ்டாலின், நவீனத் தமிழகத்தின் வரலாற்றுக்கு அடித்தளமான தந்தை பெரியாரை தந்த ஈரோட்டிற்கு திராவிட இயக்கத்தின் முதன்மைத் தொண்டனான இங்கே வந்துள்ளேன்.

ஈரோட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோட்டை பற்றி சொல்ல வேண்டுமெனில் இது, மஞ்சள் நகரம், சந்தன நகரம், தொழில் நகரம், ஜவுளி நகரம், கைத்தறி நகரம், இயற்கை நகரம், விடுதலை வீரர்களைத் தந்த நகரம் என்று கூறினார். ஈரோட்டில் திராவிடமாடல்திட்டங்களால் பயன் பெற்றவர்கள் குறித்து பேசும் போது, 4 லட்சத்து 9 ஆயிரத்து 354 குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைவழங்கப்படுகிறது. விடுபட்ட மீதமுள்ள பெண்களுக்கும் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. விடுபட்ட பெண்களுக்கும் மகளிர் உரிமைத் தொகை

வரும் டிசம்பர் 15ஆம் தேதிக்குள் அதுவும் வழங்கப்பட இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். மகளிர்உரிமைத்தொகை விஷயத்தில் தகுதி வாய்ந்த பெண்களுக்கு மட்டும் என்று கூறி பலருக்கும்கிடைக்கவில்லை என்ற அதிருப்தி நிலவி வருகிறது. ஏழை, எளிய மக்கள் பயன்பெற வேண்டும் என மிகவும் கவனமாக கணக்கெடுத்து நிதியுதவியை தமிழக அரசு வழங்கி வருகிறது.

இருப்பினும் அதிருப்திகள் எழுந்த வண்ணம் இருந்தன. இந்த திட்டத்தில் விண்ணப்பிக்க அவ்வப்போது வாய்ப்பளிக்கப்பட்டு வருகிறது. வசதி வாய்ப்பு பெற்றவர்களின் பெயர்கள் நீக்கப்படும் நடவடிக்கையும் மறுபுறம் எடுக்கப்படுகிறது. சமீபத்தில் கூட உங்களுடன் ஸ்டாலின் முகாம் மூலம் ஏராளமான விண்ணப்பங்கள் குவிந்தன. இந்த சூழலில் விடுபட்டவர்களுக்கும் 1,000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்புபெரும்மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈரோடு மாவட்டத்திற்கான ஆறு புதிய அறிவிப்புகள்

புன்செய் புளியம்பட்டி நகராட்சிக்கு 4 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவிலும், கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு 4 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலும் புதிய நகராட்சி அலுவலக கட்டடங்கள் கட்டப்படும்.

பவானிசாகர், கீழ்பவானி நீர்ப்பாசன திட்டங்களின் கீழ், திட்ட நிபந்தனையுடன் வழங்கப்பட்ட பட்டாக்களை, நிரந்தரபட்டாவாகமாற்ற வேண்டும் என்ற சத்தியமங்கலம், நம்பியூர், பவானி,கோபிசெட்டிபாளையம், மொடக்குறிச்சி, கொடுமுடி, பெருந்துறை மற்றும் ஈரோடு ஆகிய வட்டங்களை சேர்ந்த விவசாயிகளின் கோரிக்கைய ஏற்று, இந்த 90 கிராமங்களில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளின் பட்டாக்கள், நிரந்தரப் பட்டாவாக மாற்றப்படும்.

அந்தியூர் அருகேயுள்ள தோனி மடுவுப் பள்ளத்தின் குறுக்கே 4 கோடி ரூபாய் செலவில் புதிய தடுப்பணை அமைக்கப்படும்.

சாயப் பட்டறைக் கழிவுகளால் பாதிக்கப்பட்ட நொய்யல் ஆற்றுப் பாசன விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக பல்வேறு வழக்குகள் மற்றும் சட்டச் சிக்கல்களை தீர்ப்பது குறித்து ஆராய வல்லுநர் குழு அமைக்கப்படும். பெருந்துறையில் தற்போதுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு5கோடிரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டி தரப்படும்.

அந்தியூர் மற்றும் எண்ணமங்கலம் வருவாய் கிராமங்களில் உள்ள நிலங்களுக்கான பதிவேடுகளில் உள்ள நிபந்தனை பட்டாக்கள் அயன் பட்டாக்களாக மாற்றப்படும். பின்னர், மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களைப் பட்டியலிட்டு முதல்வர் பேசினார். பின்னர் விவசாயிகளுக்குதுரோகம் இழைப்பதாக எடப்பாடி பழனிசாமியையும், தமிழர்களை வஞ்சிப்பதாக ஆளுநர் ஆர்.என். ரவியையும் விமர்சித்துப் பேசினார்.

தமிழ்நாட்டில் இருந்து வரியை மட்டும் வாங்கிக்கொண்டு, நலத் திட்டங்களை செயல்படுத்த போதிய நிதி ஒதுக்குவதில்லை என்று மத்திய அரசையும் விமர்சித்துப் பேசினார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது,

தில்லியில் பல கார்கள் மாறி, யார் யாரையோ எடப்பாடி பழனிசாமி சந்தித்தார். பிரதமரை சந்தித்து நெல் ஈரப்பதம் தொடர்பாக கோரிக்கை விடுத்தாரா? விவசாயிகளுக்காக பேச செல்கிறார் என்றால், நானே கார் ஏற்பாடு செய்து தருகிறேன்.

பச்சைத் துண்டை அணிந்துகொண்டுவிவசாயிகளுக்கு பச்சை துரோகம் செய்வதாக விமர்சித்தபோது அவருக்கு கோபம் வந்தது. இப்போதும் சொல்கிறேன், எடப்பாடி பழனிசாமி விவசாயிகளுக்கு செய்தது துரோகம் மட்டுமே. மேற்கு மண்டலத்தைச் சேர்ந்தவர் எனக் கூறிக்கொள்ளும் பழனிசாமி, ஈரோட்டிற்கு என்ன செய்தார்?

தமிழகத்தின் வளர்ச்சியை நிரந்தரமாகக் கெடுக்க வேண்டும் என ஒருவர் நினைக்கிறார், அவர்தான் ஆளுநர் ஆர். என்.ரவி.தமிழர்கள் தேச விரோதிகள் என ஆளுநர்நினைக்கிறார்.அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டை பயங்கரவாதிகள் உலவும் இடமாக சித்தரிக்க முயற்சி க்கிறார். ஆளுநர் இருக்கும் அரசியல்சாசனபொறுப்புகளுக்கு துளியும் பொருத்தமற்ற தகுதியற்ற செயல் இது.

கும்பகோணத்தில் பல்கலைக் கழகம் தொடங்கும் மசோதாவுக்கு அனுமதி தராமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார். தமிழ் மொழியைப்பற்றிதமிழ்நாட்டுக்கு பாடம் எடுக்க வேண்டாம். அதில் தேர்ச்சி பெற்றவர்கள் நாங்கள்.

மத்திய ஆட்சியில் பஹல்காம் தாக்குதல், தில்லி குண்டு வெடிப்பு போன்ற அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன. தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருக்கிறது. வளர்ச்சிப் பாதையை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது.

ஆனால், தமிழ்நாடு எதைக்கேட்டாலும்தரக்கூடாது என பாஜக முடிவுடன் இருக்கிறது. வரி வசூலிக்கமட்டும்தமிழ்நாடு. ஆனால் ரயில்வே திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவது கிடையாது. வடமாநிலங்களில் 20 லட்சத்திற்கும் குறைவாக மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கு மெட்ரோ திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் வளர்ச்சியை தடுப்பதற்காகவே ஆளுநரை நியமித்திருக்கிறது மத்திய அரசு என முதல்வர் பேசினார்

# எம்.எல்.ஏ. பதவி ராஜினாமா: த.வெ.க. தலைவர் விஜய்யுடன், செங்கோட்டையன் சந்திப்பு





சென்னை,

அ.தி.மு.க. மூத்த நிர்வாகிகளில் ஒருவரான கே.ஏ.செங்கோட்டையன், 1977–ம் ஆண்டு முதல் 9 முறை எம்.எல்.ஏ.வாக இருந்துள்ளார்.ஜெயலலிதாமறைவுக்கு பிறகு அ.தி.மு.க. அமைப்பு செயலாளராக செயல்பட்டு வந்த செங்கோட்டையனுக்கும், கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

அ.தி.மு.க.வில் இருந்து பிரிந்தவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்று கே.ஏ.செங்கோட்டையன் கோரிக்கை வைத்த நிலையில்,கட்சிப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட அவர், பிறகு கட்சியில் இருந்தும் நீக்கப்பட்டார். அவருடைய ஆதரவாளர்களும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர். தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்யை முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் நேரில் சந்தித்துப் பேசியிருக்கும் நிலையில்,அவர் தவெகவில் இணைந்தால் அமைப்புப் பொதுச் செயலர் பதவி வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பேச்சுவார்த்தை நடத்தியிருக்கும் நிலையில், செங்கோட்டையன், வியாழக்கிழமை காலை கட்சித் தலைவர் விஜய் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைவார் என்றும் கூறப்படுகிறது.

கட்சியின் ஒருங்கிணைப்பு குறித்து பேசியதால், அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சரும், கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்த செங்கோட்டையன், இன்று காலை சென்னை தலைமைச் செயலகம் சென்று, பேரவைத் தலைவர் அப்பாவுவை சந்தித்து, தன்னுடைய எம்எல்ஏ பதவியை ராஜிநாமா செய்வதற்கான கடிதத்தை வழங்கினார்.

பிறகு, அமைச்சர் சேகர்பாபுவை சந்தித்து சில நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினார். இதனால், செங்கோட்டையன் திமுகவில் இணைவாரா என்ற எதிர்பார்ப்புகள் எகிறின.

ஆனால், யாரும் எதிர்பாராத வகையில், இன்று மாலை, சென்னை பட்டினம்பாக்கம் பகுதியில் உள்ள த.வெ.க. தலைவர் விஜயின் வீட்டுக்கு வருகை தந்த அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதனால், செங்கோட்டையன் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைவதற்கான சாதகங்கள் ஏற்பட்டுள்ளதாகவே பார்க்கப்படுகிறது.

தற்போது,த.வெ.க.கட்சியில் இணைவதற்கு முன்பாக தனக்கு என்ன பதவிகள் வழங்கப்படும் என விஜய் உடன் செங்கோட்டையன் ஆலோசனை நடத்துவதாகவும் இந்த ஆலோசனைகளுக்கு பிறகு அவருக்கு, அமைப்பு பொதுச் செயலாளர் பதவி கொடுக்கப்படும் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன்!

அதிமுகவை எம்ஜிஆர் தொடங்கியதில் இருந்து அக்கட்சியின் உறுப்பினராக இருந்து படிப்படியாக பல்வேறு பதவிகளை பெற்று, தொடர்ந்து எம்எல்ஏவாக இருந்து வந்த செங்கோட்டையன் அதிமுக ஆட்சிக் காலத்தில பல முக்கிய துறைகளின் அமைச்சராகவும் பதவி வகித்தவர்.

ஒரு சில மாதங்களாக, அதிமுக கட்சித் தலைமைக்கு எதிராக சில கருத்துகளைக் கூறி வந்ததாகக் கூறி, கட்சியின் பொறுப்புகளிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருந்த செங்கோட்டையன்,இபிஎஸ் – ஓபிஎஸ் இணைப்பு குறித்து பேசியதால் கட்சியிலிருந்தே நீக்கப்பட்டார். தற்போது தவெக தலைவருடன் சந்திப்பு, நாளை அக்கட்சியில் இணையும் வாய்ப்பு உள்ளது என தமிழக அரசியல் பரபரப்பான காட்சிகளுடன் நகர்ந்து வருகிறது.

# வலுக்கும் காற்றழுத்த தாழ்வு மண்டலம்: வட தமிழகத்தில் நவ.29, 30ல் அதி கனமழை எச்சரிக்கை



சென்னை: மலாக்கா அருகே நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், 'சென்யார்' புயலாக வலுப்பெற்று இந்தோனேசியாவில் கரையை கடந்தது. இலங்கை அருகே நாளை உருவாகும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக வட தமிழகத்தில் நவ.29, 30 தேதிகளில் ஒரிரு இடங்களில் அதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.சென்னைவானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மலாக்கா ஜலசந்தி பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், 'சென்யார்' புயலாக வலுப்பெற்று, மலாக்கா ஜலசந்திமற்றும்அதனை ஒட்டிய வடமேற்கு இந்தோனேசியாபகுதிகளில் நிலவியது. பிறகு, தென்மேற்கு திசையில் நகர்ந்து, இந்தோனேசிய கடற்கரையை கடந்தது.

தென்மேற்கு வங்கக்கடல்மற்றும்அதனை ஒட்டிய தென்கிழக்கு இலங்கை – இந்திய பெருங்கடல் பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி நிலவுகிறது. இது நாளை (நவ.27) வடமேற்கு திசையில் நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும். அதற்கடுத்த 48 மணி நேரத்தில், மேலும் வலுப்பெற்று, அதே திசையில் நகர்ந்து, தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில், வட தமிழகம் – புதுச்சேரி கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும்.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை ஒரிரு இடங்களிலும், 28–ம் தேதி கடலோர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 29–ம் தேதி வட தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 30–ம் தேதி வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், டிச.1, 2 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

28–ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கன முதல் மிக கனமழையும், ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

29–ம் தேதி திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில், ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும், புதுக்கோட்டை, திருச்சி, திருப்பத்தூர், வேலூர், தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

30–ம் தேதி திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன முதல் அதி கனமழையும்,சென்னை,செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. டிச.1–ம் தேதி திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கனமழை பெய்யக்கூடும்

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# மதுராந்தகம் நகரில் BLA 2 நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

## நகர கழக செயலாளர் பூக்கடை கே.சி .சரவணன் பங்கேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகரில் உள்ள BLA 2 நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் அதிமுக பொது செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொளி காட்சி மூலம் தேர்தல் பொறுப்பாளர் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி னார்.

அதன்படி செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட தேர்தல் பொறுப்பாளருமான முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன், செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் ஆறுமுகம், மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்மரகதம்குமரவேல் ஆலோசனைப்படி மதுராந்தகம் நகர கழக செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம் மதுராந்தகம் நகரக் கழக செயலாளர் பூக்கடை கே .சி. சரவணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் BLA2நிர்வாகிகளுக்கு சிறப்பு வாக்காளர் திருத்தும் பணி நடைபெற்று வருகிறது இப்பணியை அரசு அதிகாரிகளுடன் சென்று வாக்காளர் சேர்த்தல், இறந்தவர்கள் பெயர் நீக்குதல், இடமாற்றம் சென்றவர்கள் பெயர் நீக்குதல் பல்வேறு பணிகளில் BLA 2நிர்வாகிகள் செயல்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்ச்சியில் மதுராந்தகம்நகரஅம்மா பேரவை செயலாளர் வழக்கறிஞர் எம்.பி .சீனிவாசன், முன்னிலை வகித்தார். இந்த நிகழ்ச்சியில் மதுராந்தகம் நகர துணை செயலாளர் முத்து, மதுராந்தகம் நகர்மன்ற கவுன்சிலர்கள் தேவி வரலட்சுமி, காதர் மொய்தின், முன்னாள் நகர்மன்ற கவுன்சிலர் பன்னீர்செல்வம் மற்றும்BLA2நிர்வாகிகள் மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



10க்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பும் வகையில்

# ஆலங்குளம் கால்வாய் கரையை பலத்திடுத்தி, மடை விரிவுப்படுத்தும் பணி விரைவில் தொடங்கும்

## ராபர்ட் புரூஸ் எம்.பி., சிவபத்மநாதன் தகவல்

10க்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பும் வகையில் ஆலங்குளம் கால்வாய் பிரியும் இடத்தில் மடையை விரிவுபடுத்தியும், கரையை பலப்படுத்தி, வாறுகால் அமைக்கும் பணி விரைவில் தொடங்கும் என நெல்லை எம்.பி.ராபர்ட் புரூஸ், முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவபத்மநாதன் ஆகியோர் தெரிவித்தனர்.

கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் மகிழ்வண்ணநாதபுரம் பகுதியில் அமைந்துள்ள நாகல்குளம் நிரம்பி மறுகால் வழியாக விழும் தண்ணீர் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக்காலத்தில் வெட்டப்பட்ட கால்வாய் மூலம் அடைக்கப்பட்டணம் அருகே உள்ள மதகிலிருந்து ஆலங்குளம் கால்வாய்க்கு பிரித்து அனுப்பப்படுகிறது. அந்த கால்வாய் பிரிகிற இடத்தில் கடம்ப குளத்திற்கு நீர் செல்கிற வகையில் மதகு அமைந்துள்ளது. அக்குளம் முழுமையாக நிரம்பிய பிறகு அங்கு செல்லும் தண்ணீர் அடைக்கப்பட்டு ஆலங்குளம் செல்ல கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்படும்.

அந்த சமயத்தில் அண்ணாநகர், சாலைப்புதூர், மீனாட்சி சுந்தரபுரம் பகுதியில் தண்ணீர் கால்வாய்க்கு வெளியே வீடுகளுக்குள் செல்கிறது. எனவே ஆலங்குளம் கால்வாய் அடைக்கலப்பட்டணம் அருகே பிரியும் இடத்தில் அமைந்துள்ள மடையை விரிவு படுத்தவும், கால்வாய் பிரிவிலிருந்து மேற்கே இலங்காபுரிபட்டணம், நவநீதகிருஷ்ணபுரம், மீனாட்சிசுந்தரபுரம், பூபாலசமுத்திரம் வரை கால்வாயை தூர்வாறி இருபுறமும் வாரங்கால் அமைத்திட வேண்டும் என ஆலங்குளம் நீர் பாசன கமிட்டி தலைவர் நெல்லை எம்.பி. ராபர்ட் புரூஸ் மற்றும் முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வக்கீல் பொ. சிவபத்மநாதனிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

அதன் அடிப்படையில் நேற்று எம்.பி. ராபர்ட் புரூஸ், முன்னாள் மாவட்ட செயலாளர் சிவபத்மநாதன் ஆகியோர் அப்பகுதியில் நேரில் பார்வையிட்டனர். பின்னர் அவர்கள் கூறியதாவது:- இந்த கால்வாயை சீரமைக்கவும், கால்வாய் மதகில் இருந்து மீனாட்சிசுந்தரபுரம் தென்புறம் வரை கால்வாய் தணிவாக இருக்கிற பகுதியில் கரையை உயர்த்தவும் ரூ.6 கோடி அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது. அதில் ரூ.90 லட்சம் கரையை உயர்த்தவும் மதகிலிருந்து மேற்கே இருபுறமும் வாரங்கால் அமைத்திடவும் நிதி கேட்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து ரூ.30 லட்சம் வழங்கப்படவுள்ளது.

இதனால் இப்பணிகள் விரைந்து தொடங்கப்படும்.

கரையை உயர்த்தி இருபுறமும் வாறாங்கல் கட்டினால் ஆலங்குளத்திற்கு முழுமையாக தண்ணீர் செல்லும். இதனால் அழகாபுரி, பூலாங்குளம், கோவிலூற்று, வடமலைப்பட்டி, வள்ளியம்மாள்புரம், பண்டாரக்குளம், ஆண்டிபட்டி, அயோத்தியாபட்டணம், கருமனூர், காளத்திமடம் போன்ற பகுதியில் இருக்கிற குளங்களும் நிரம்பி, விவசாயிகள் பாசன வசதி பெறுவர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

அப்போது, காங்கிரஸ் மாநில காங்கிரஸ் பொதுச்செயலாளர் எம்.எஸ்.காமராஜ், கீழப்பாவூர் செல்வன், கீழப்பாவூர் பேரூராட்சி துணைத் தலைவர் ராஜசேகர், முன்னாள் வட்டார காங்கிரஸ் தலைவர் ஆறுமுக பாண்டியன், முன்னாள் மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் மேகநாதன், மாநில வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர் பால்ராஜ், அருணாசலம், கலர் என்ற சுப்பிரமணியன், நீர்ப்பாசன கமிட்டி தலைவர் குமார், ஆலங்குளம்காமராஜர் கால்வாய் பராமரிப்பு கமிட்டி. ஒருங்கிணைப்பாளர்: வழக்கறிஞர் ஆ.ராஜா, துணைத் தலைவர்: அமராவதி ஜெகன், செயலாளர்: கணேசன், துணைச் செயலாளர் கண்ணன், பொருளாளர் ஜார்ஜ் தங்கம், நிர்வாகிகள், தங்க செல்வம், வில்லியம் தாமஸ், ரமேஷ், லிவிங்ஸ்டன் விமல், ஐசக் இம்மானுவேல், லிங்கவேல் ராஜா ,ஆட்டோ செல்வம், அகிலம் ஆனந்த், தமிழரசன், பொன்ராஜ், ஒயிட் மோகன், அலெக்ஸ்ராஜா உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடுமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின்நேற்று(26.11.2025)ஈரோட்டில்நடைபெற்ற அரசு விழாவில். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் பதிவு பெற்ற பெண் ஒட்டுநர்களுக்கு மானியத்துடன் கூடிய ஆட்டோக்களை வழங்கினார். இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். கந்தசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கீழப்பாவூர் கிழக்கு ஒன்றியத்தில் துணை முதலமைச்சர் பிறந்தநாளையொட்டி

# 5 அங்கன்வாடிகளுக்கு உபகரணங்கள் முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவபத்மநாதன் வழங்கினார்

துணை முதல்வர் பிறந்த தினத்தையொட்டி கீழப்பாவூர் கிழக்கு ஒன்றியத்தில் உள்ள 5 அங்கன்வாடிகளுக்கு உபகரணங்களை முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவபத்மநாதன் வழங்கினார்.

திமுக இளைஞரணி செயலாளரும், தமிழக துணை முதல்வருமான உதயநிதிஸ்டாலின்பிறந்த தினத்தையொட்டி முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் வக்கீல் பொ. சிவபத்மநாதன் ஏற்பாட்டில் கீழப்பாவூர் கிழக்கு ஒன்றிய பகுதியில் உள்ள அங்கன்வாடிகளுக்கு இருக்கை, பீரோ, பாய், வாட்டர் கேன் உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர் சிவன்பாண்டியன் தலைமை வகித்தார். ஒன்றிய அவைத்தலைவர் முருகன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கோமு, ஒன்றிய கவுன்சிலர் நாகராஜ் முன்னிலை வகித்தனர். ஒன்றிய கவுன்சிலர் மகேஸ்வரி சத்;தியராஜ் வரவேற்று பேசினார். முன்னாள் மாவட்ட செயலாளர் சிவபத்மநாதன் கலந்து கொண்டு, அத்தியூத்தில் ஒரு அங்கன்வாடி, முத்துகிருஷ்ணபேரி மற்றும் கல்லூத்தில் தலா 2 அங்கன்வாடிகளுக்கு தலா 25 இருக்கைகள், பீரோ, பாய், மின்விசிறி, வாட்டர் கேன் உள்ளிட்ட உபகரணங்கள் மற்றும் குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கி பேசினார். இந்நிகழ்ச்சிகளில், முன்னாள் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பி னர் மேகநாதன், ஆலங்குளம் முன்னாள் பேரூராட்சி துணைத்தலைவர் தங்கச்செல்வம், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் பொன்மோகன்ராஜ், சிவராஜ்பாண்டியன், முன்னாள் மாணவர் அணி துணை அமைப்பாளர் தினேஷ் (எ)சண்முகசுந்தரம், ஒன்றிய ஒன்றிய மகளிர் அணி துணை அமைப்பாளர் அம்பிகா அமிர்தவல்லி, ஒன்றிய பிரதிநிதி மூர்த்தி, அவைத் தலைவர் மகேந்திரன், கிளை செயலாளர்கள் முருகன், ஜெகன், காளிதாஸ், நிர்வாகிகள் லிங்கம், வேல்முருகன், ராமர் களஞ்சியம்,சாமி,,அருள்மணி, ஜெயகுமார், முருகன், செல்லக்காளி சதீஷ் மணி, நாகல்குளம் காசி பாண்டியன், துத்திகுளம் மனுவேல் ராஜ் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரி கிருஷ்ணன், ராஜபாண்டியன், குணா, வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன், கரும்பனூர் மயில்ராஜ், மாரியப்பன், பொன்னுத்துரை, லட்சுமண பெருமாள், சொல்லின் செல்வன், துரைச்சாமி மற்றும் அங்கன்வாடி அமைப்பாளர்கள் ஜெயா, சாந்தா, கொமு, ரெஜினா, பொட்டு திலகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா

செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் நவம்பர் 27 பிறந்தநாள் விழா காணும் தமிழக துணை முதல்வர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா தெருமுனை கூட்டம் திருமுக்காடு, பெரும்பேர் கண்டிகை, சிறுபேர்பாண்டி ஊராட்சிகளில் நடைபெற்ற தெருமுனை கூட்டத்தை அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் டி.வி. கோகுலகண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பார்த்தசாரதி, ராஜகோபால், கருணாகரன், வெங்கடேசன், சாவித்திரி சங்கர், சுதாகர், இவர்கள் முன்னிலையில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெயக்குமார், துரை கணேஷ், சுதாமன்,வரவேற்புரையில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம் எல் ஏ , தலைமை கழக பேச்சாளர் பொன்னேரி சிவா, அவர்கள் கலந்து கொண்டு தலைமைகழக பேச்சாளர் பேசுகையில் இந்த திமுக ஆட்சியில் மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை செய்த அரசு திமுக அரசு எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில்திமுகஅமோக வெற்றி பெற அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம் வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு என முழக்கமிட்டு துணை முதல்வர் பிறந்த நாளை வெகு விமர்சையாக கொண்டாடுவோம் என உரையாற்றினார் இந்த நிகழ்ச்சியில் அச்சிறுப்பாக்கம் பேரூர் கழக செயலாளர் எழிலரசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் உசேன், பேரூராட்சி மன்ற தலைவர் நந்தினி கரிகாலன், மாவட்ட குழு உறுப்பினர் வசந்தா, மாவட்ட பிரதிநிதிகள் ஏழுமலை, சித்தாத்தர், ஒன்றிய குழு உறுப்பினர் மேகலா, மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கலியுக கண்ணதாசன், ஜியாவுதீன், சிவக்குமார் ,பிரபாகரன், ரங்கநாதன், யுவராஜ் ,சுரேஷ், சம்பத் வெங்கா, ஒன்றிய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் லட்சுமணன், வெங்கடேசன், செந்தில்குமார், சதீஷ் ,யுவராஜ், மனோஜ் ,ஜானகிராமன், பத்மநாபன் ,யுவன் சங்கர்,ராஜி,துளசி,செண்பகம், முருகன் ,நேதாஜி ,சுபாஷ், சந்திரபோஸ், தீபக்குமார், சேது மாதவன், சாந்தி கிருஷ்ணன் அனுசியா சிங்காரவேலன் ,ஜெயந்திமாலா கவிதா, மற்றும் கழக முன்னோடிகள் மணி அறிவழகன் பொன்னிவளவன் முகமது அலி சீனிவாசன் தணிகைமலை இந்துமதி பாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்




# வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☏ +919444082959


# சுரண்டை அருகே ரூ. 7 ஆயிரம் லஞ்சம் வாங்கிய மின்வாரிய பொறியாளர் உள்ளிட்ட இருவர் கைது





தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் தாலுகா, கீழ வீராணம் கிராமம், காமாட்சி அம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த கருப்பசாமி என்பவர் மகன் செல்வகணேஷ் (வயது-30) இவர் அவரது அப்பாவின் பெயரில் வீ.கே.புதூரில் உள்ள நிலத்திற்கு 2020 ஆம் ஆண்டு மின் கம்பம் நட ரூ.24,000/-ம் பணம் செலுத்தி இலவச விவசாய மின் இணைப்பு வாங்கியுள்ளார்.

அந்த மின் இணைப்பு சம்மந்தமாக கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு வீ.கே.புதூர் மின்வாரிய அலுவலகத்தில் இருந்துஇளநிலைபொறியாளர் பிரேம் ஆனந்த் என்பவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு புகார்தாரரிடம் அவரது விவசாய இலவச மின் இணைப்பிற்கு மீட்டர் வைக்க வேண்டும் என்று கூறினார் அதன்பேரில்கடந்த22.11.2025-ம்தேதிசெல்வகணேஷ் பொறியாளர் பிரேம் ஆனந்தை சந்தித்து கேட்டபோது நிலத்திற்கான பட்டா, இசி, மோட்டார் பில், டெஸ்ட் ரிப்போர்ட், அக்ரிமெனட் ஆகிய ஆவணங்கள் மற்றும் ரூபாய் ரூ.10,000/-த்துடன் பணத்துடன் வந்து அவரை பார்க்க சொல்லியுள்ளார்,

அதன்பேரில் 24.11.2025-ம் தேதி பிரேம் ஆனந்தை பார்த்துபேசிரூ10,000/-பணம்கொடுக்கமுடியாததால் கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டுள்ளார் அப்போது பிரேம் ஆனந்த் ரூ.7,000/- பணம் கொடுத்தால்தான் மீட்டர் பொருத்துவேன் என்று கறாராக சொல்லிவிட்டதால், பணம் கொடுக்க விருப்பம் இல்லாத செல்வ கணேஷ் தென்காசி லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுத்தார்

அதன்பேரில் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் வீ.கே.புதூர் மின் வாரிய பொறியாளர் பிரேம் ஆனந்த் மீது 24.11.2025-ம் தேதி வழக்கு பதிவு செய்து ரசாயனப் பவுடர் தடவப்பட்ட ரூபாய் 7,000/-த்தை செல்வ கணேஷிடம் கொடுக்க அந்த பணத்துடன் நேற்று புகார்தாரர் செல்வ கணேஷ் பிரேம் ஆனந்தை சந்தித்த போது மேற்படி பணத்தை அவரதுநண்பர்கழுநீர்குளத்தைசேர்ந்தசுடலைமுத்து என்பவர் மகன் துரை (வயது-43) என்பவரிடம் கொடுக்க கூறியுள்ளார்.

அந்தலஞ்சப்பணத்தைதுரைபெற்றுக்கொண்டபோது அங்கு மறைந்திருந்த தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு டிஎஸ்பி பால் சுதாகர் தலைமையிலான அதிகாரிகள் இளநிலை பொறியாளர் பிரேம் ஆனந்த் மற்றும் துரை ஆகியோர் கைது செய்தனர்

மேலும் இதுபோல் பொதுமக்களிடம் அரசாங்க ஊழியர்கள் லஞ்சமாக பணம் கேட்டால் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கலாம் என டிஎஸ்பி பால் சுதாகர் தெரிவித்தார்

# மதுரையில் நடைபெறும் சர்வதேச ஹாக்கி போட்டிக்காக நவ.28 முதல் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது




மதுரையில் நடைபெறும் சர்வதேச ஹாக்கி போட்டிக்காக நவ.28 முதல் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ரேஸ்கோர்ஸ் ரோட்டைச் சுற்றி எந்த ஒரு வாகனமும் 'பார்க்கிங் செய்ய அனுமதி இல்லை

தாமரை தொட்டி சந்திப்பிலிருந்து ரேஸ்கோர்ஸ் ரோடு வழியாக யூத் ஹாஸ்டல் சந்திப்பிற்கும்,யூத் ஹாஸ்டல் சந்திப்பிலிருந்து தாமரை தொட்டி சந்திப்பிற்கும் விளையாட்டு வீரர்களின் வாகங்களை தவிர மற்ற வாகனங்களுக்கு அனுமதி இல்லை.

தாமரை தொட்டி சந்திப்பிலிருந்து ரேஸ்கோர்ஸ் ரோடு வழியாக மேலூர் ரோட்டிற்கு செல்லும் வாகனங்கள் அவுட் போஸ்ட் வழியாக செல்ல வேண்டும்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (26.11.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் ஈரோடு மாவட்டம், அரச்சலூர் ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் உள்ள தீரன்சின்னமலை திருவுருவச்சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

# நந்தா சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதலாமாண்டு மாணவர்கள் வரவேற்பு விழா




ஈரோடு நந்தா சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதலாமாண்டு புதிய மாணவர்களின் வரவேற்பு விழா இனிதே நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

விழாவில் கலந்து கொண்ட மாணவர்களையும் அவர்தம் பெற்றோர்களையும் கல்லூரியின் முதல்வர் மருத்துவர் எம். மேனகா வரவேற்று பேசினார்.

பின்னர் சென்னையில் செயல்பட்டு வரும் ஜோதி சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் மருத்துவர் பி. செந்தில் குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையா ற்றினார். அப்போது கூறுகையில், ஆங்கில மருத்துவத்துடன் சித்த மருத்துவ சிகிச்சை முறைகள் எவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுவதைச் சுட்டிக் காட்டினார். இதன் பயனாக அட்டைவிடல் சிகிச்சை முறையானது அறுவை சிகிச்சைக்கு பின் நோயாளியின் உடல் நிலையில்ஏற்படும் முன்னேற்றம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

விழாவில் கலந்து கொண்ட மாணவர்களையும் அவர்தம் பெற்றோர்களையும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ். திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம் மற்றும் நிர்வாக அலுவலர் மருத்துவர் ஜீ.தர்மராஜ் ஆகியோர் பாராட்டி, தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள எம்.குன்னத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு சீனிவாச பெருமாள் கோவிலில் பஞ்சமி விதியை முன்னிட்டு தீர்த்தவாரி திருவிழா நடைபெற்றது இதையொட்டி கோவில் அருகில் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் சக்கரத்தாழ்வாருக்கு அபிஷேக பொடி பால் தயிர் இளநீர் பஞ்சாமிர்தம் தேன் சந்தனம் உட்பட அபிஷேகதிரவியங்கள் மூலம் மகாஅபிஷேகம் செய்யப்பட்டது மேலும் சக்கரத்தாழ்வார் முன்பு அமைக்கப்பட்டு இருந்த யாக குண்டத்தில் பல்வேறு பொருட்களை கொண்டு சிறப்புமாக நடைபெற்றது முடிவில் பட்டாச்சாரியார்கள் மங்கள வாத்தியங்கள் முழங்க கோவிந்தா கோவிந்தா கோஷங்கள் எழுப்பியவாறு அருகில் இருந்த தீர்த்த குளத்தில் சக்கரத்தாழ்வார் வைத்து சிறப்பு அபிஷேகம் செய்தவர்கள் மகா தீபாராதனையும் நடைபெற்றது தொடர்ந்து பஞ்சமி திதி தீர்த்தவாரி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சுமார் 10,000 மேற்பட்ட பக்தர்கள் தீர்த்தக் குளத்தில் இறங்கி புனித நீராடி சீனிவாச பெருமாளை வணங்கினர்...

# அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## க.சுந்தர் எம்.எல்.ஏ. செல்வம் எம்.பி, ஒன்றிய செயலாளர் கோகுலகண்ணன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்

செங்கல்பட்டு மாவட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணியினை செவ்வனே பணியாற்றிடவும் அண்மையில் புதியதாக மத்திய ஒன்றியம் பிரிக்கப்பட்டு கட்சி பணியாற்ற வாய்ப்பளித்த. காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் MLA மேலிட பொறுப்பாளர் உழவர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு எம் ஆர் கே பன்னீர்செல்வம் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய செயலாளர் T.V ,கோகுலக்கண்ணன் அவர்களை புதிதாக நியமனம் செய்யப்பட்ட. பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பெரும்பேர் கண்டிகை ஜே,பார்த்தசாரதி பாபுராயன்பேட்டை து.கருணாகரன் திம்மாபுரம் ஜே.வெங்கடேசன் ராமாபுரம் பி.இந்துமதி எலப்பாக்கம் ஏ.முகமதுஅலி சிறுபேர்பாண்டி ஆர். ரகு ராமாபுரம் சீனுவாசன் ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றனர்



# யுனைடெட் பப்ளிக் பள்ளியில் 46 வது கோயம்புத்தூர் சகோதயா பள்ளிக்களுக்கு இடையேயான கோ கோ போட்டிகள்

## 12, 14, 16 மற்றும் 19 வயதிற்குட்பட்டோர் பங்கேற்றனர்




கோவை பெரியநாயக்கன்பாளையம் யுனைடெட் பப்ளிக் பள்ளியில் 2025 – 2026 ம் ஆண்டிற்கான 12 வயதிற்குட்பட்ட 14 வயதுக்குட்பட்ட 16 வயதிற்கு உட்பட்ட மற்றும் 19 வயதிற்கு உட்பட்ட சி பி எஸ் சி பள்ளி மாணவர்களுக்கான, 46 வது கோயம்புத்தூர் சகோதயா பள்ளிகளுக்குஇடையேயானகோ கோ போட்டிகள் நடைபெற்றது. இதில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 56 அணிகள் பங்கேற்றன. வெற்றி பெற்ற அணியினருக்கு மெடல்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசுக் கோப்பை வழங்கப்பட்டது.

2025–2026ம் ஆண்டிற்கான 12 வயதிற்குட்பட்ட 14 வயதுக்குட்பட்ட 16 வயதிற்கு உட்பட்ட மற்றும் 19 வயதிற்கு உட்பட்ட சி பி எஸ் சி பள்ளி மாணவர்களுக்குஇடையேயான, கோயம்புத்தூர் 46 வது சகோதயா பள்ளிகளுக்கு இடையேயான கோ கோ போட்டிகள் பெரியநாயக்கன்பாளையம் தி யுனைடெட் பப்ளிக் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

2 நாட்கள் நடைபெற்ற இந்த போட்டிகளில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 56 அணிகள் பதிவு செய்திருந்தனர். போட்டிகளை யுனைடெட் பப்ளிக் பள்ளியின் செயலர் முனைவர் மைதிலி சண்முகம் வீரர்களுக்கு அறிவுரைகள் வழங்கியும் கை குழுக்கி வாழ்த்து தெரிவித்தும், டாஸ் போட்டும் தொடங்கி வைத்தார்.

முதல் நாள் போட்டியில் 14 வயதிற்குட்பட்ட 16 வயதிற்குட்பட்ட மற்றும் 19 வயதுக்குட்பட்ட மூன்று பிரிவினர்களுக்கான போட்டிகள் நடைபெற்றன. இதில் 14 வயதிற்குட்பட்டோர் பிரிவில் எம் டி என் ஃபியூச்சர் பள்ளி முதலிடமும், பிருந்தாவன் பப்ளிக் பள்ளி இரண்டாம் இடமும், ஏ கே ஆர் பள்ளி மூன்றாம் இடமும், உடுமலை யுனைடெட் பப்ளிக் பள்ளி நான்காம் இடமும் பெற்றனர்.

அதேபோல் 16 வயதிற்குட்பட்டோர் பிரிவில் எம் டி என் பியூச்சர் பள்ளி முதலிடமும், வித்யா விகாஸ் இன்டர்நேஷனல் பள்ளி இரண்டாம் இடமும், நல்லாம்பாளையம் அமிர்தா வித்யாலயா பள்ளி மூன்றாம் இடமும், பெரியநாயக்கன்பாளையம் யுனைடெட் பப்ளிக் பள்ளி நான்காம் இடமும் பெற்றனர்.

மேலும் 19 வயதிற்குட்பட்டோர் பிரிவில் எம் டி என் ஃபியூச்சர் பள்ளி முதலிடமும், சிந்தி இன்டர்நேஷனல் பள்ளி இரண்டாம் இடமும், டூப்ஸ் பப்ளிக் பள்ளி மூன்றாம் இடமும் பெற்றனர்.

இரண்டாம் நாள் போட்டிகளில் 12 வயதிற்குட்பட்டோர் பிரிவில் எம் டி எம் ஃபியூச்சர் பள்ளி முதலிடமும், பிருந்தாவன் பப்ளிக் பள்ளி இரண்டாம் இடமும், கீதாஞ்சலி பப்ளிக் பள்ளி மூன்றாம் இடமும், ஜி ஆர் டி பப்ளிக் பள்ளி நான்காம் இடமும் பெற்றனர்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிறைவு விழாவில் தி யுனைடெட் பப்ளிக் பள்ளியின் முதல்வர் முனைவர் ஹறிணி வெற்றி பெற்ற அணி வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்து வரவேற்புரை வழங்கினார். துணைமுதல்வர் அனிதா தேவப்பிரியா நடைபெற்றுமுடிந்த அனைத்து போட்டிகளின் முடிவுகளை அறிவித்தார். நிர்வாக இயக்குநர் முனைவர் பி சிவக்குமார் வாழ்த்துரை வழங்கினார்.

வெற்றிப்பெற்ற பள்ளிகளுக்கு தி யுனைடெட் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் பொறியாளர் சண்முகம், நிர்வாக இயக்குநர் முனைவர் பி சிவக்குமார், தி யுனைடெட் பப்ளிக் பள்ளியின் முதல்வர் முனைவர் ஹறிணி, துணை முதல்வர் அனிதா தேவப்பிரியா ஆகியோர் மெடல்கள், சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகளை வழங்கினர்.

மேலும் போட்டிகளுக்கு நடுவர்களாக பணியாற்றியவர்களுக்கும், போட்டிகள் நடைபெற உறுதுணையாக இருந்த யுனைடெட் பப்ளிக் பள்ளி உடற்கல்வி ஆசிரியர்கள் பூபதி, நரேஷ் மற்றும் யுனைடெட் கல்வி நிறுவனங்களின் உடற்கல்வி ஆசிரியர்கள் நவீன்குமார், சுரேஷ், பிரதீப், பசுவதேவன், சிந்துஜா, பிரியதர்சினி உள்ளிட்டவர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டது

# நல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் முற்றுகைப் போராட்டம்



கடலூர் மாவட்டம் நல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை டிசம்பர் 3 இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் அமரேசன் தலைமையில் 50-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் இரண்டு மணி நேரமாக அமர்ந்து போராட்டம் நடத்தியும், அதிகாரிகள் யாரும் வந்து பார்க்கவில்லை, தங்களின் குறைகளைக் கேட்கவில்லை எனக் கூறி, அதிகாரிகள் வரும்வரை போராட்டம் தொடரும் எனத் தெரிவித்து அவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்ட நேரமாகியும் அதிகாரிகள் வராததால் ஆத்திரமடைந்த மாற்றுத்திறனாளிகள், நுழைவாயிலின் கேட் முன்பு அமர்ந்து முற்றுகையிட்டு காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

இந்நிலையில், அலுவல் பணிக்காக வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், கொளஞ்சி ஆகியோர் ஒரே வாகனத்தில் புறப்பட்டனர். மாற்றுத்திறனாளிகள் அவர்களை வழிவிடுமாறு கேட்டுக்கொண்டபோது, அவர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்களை மறித்து, தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை இங்கிருந்து செல்ல மாட்டோம் என்று கூறினர்.

பின்னர், காரில் இருந்து இறங்கிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இருவரும் மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளைக் கேட்டனர். அப்போது அவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு நேர்மையான முறையில் முழு ஊதியம் வழங்கவேண்டும், நிரந்தரப்பணி வழங்கவேண்டும், மற்றும் மாற்றுத்திறனாளி ஒருவரை பணிதள பொறுப்பாளராக நியமிக்கவேண்டும் என வலியுறுத்தினர்.

தொடர்ந்து, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் செல்வநாயகம் மற்றும் ஓவர்சீஸ் சங்கர் ஆகியோர் மாற்றுத்திறனாளியிடம் கடுமையாக நடந்துகொண்டது குறித்தும் முறையிட்டனர். பின்னர், கோரிக்கைகளைக் கேட்டறிந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததன் பேரில், மாற்றுத்திறனாளிகள் போராட்டத்தைக் கைவிட்டு கலைந்து சென்றனர். இதனால் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நிலவிய பரபரப்பு முடிவுக்கு வந்தது.

# தூத்துக்குடியில் 24 மணி நேரமும் மழை வந்தாலும் மாநகராட்சி அதை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்கிறோம் முகாமில் மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்தார்



தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமிற்கு மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது.

முகாமில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில்: மாநகராட்சி பகுதியில் கடந்த 21 மாத காலமாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவுக்கிணங்க மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தின் அடிப்படையில் குறை தீர்க்கும் முகாம் நடைபெறுகிறது. இதில் பிறப்பு, இறப்பு சான்றிதழ் புதிய குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை, சாலை, கால்வாய், மின்விளக்கு உள்ளிட்ட பல்வேறு அடிப்படை பணிகளுக்கு மக்கள் கொடுக்கும் கோரிக்கை மனுக்களில் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. நான்கு மண்டலத்திலும் சூழற்சி முறையில் வாரத்தில் ஒரு நாள் பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டு வருகிறோம். உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பெறப்பட்ட மாநகராட்சி சம்பந்தப்பட்ட மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. கடந்த நான்கரை ஆண்டுகளாக திமுக ஆட்சியில் பல்வேறு வளர்ச்சி பணிகள் நடைபெற்றுள்ளது. 45 மாதமாக மாநகராட்சி பகுதிகளில் பல்வேறு பணிகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. தெற்கு மண்டலத்தில் 673 மனுக்கள் பெறப்பட்டுள்ளது அனைத்து மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. கடந்தமாதம் 19 20 தேதிகளில் 10 செமீ வரை மழை பெய்தது. குறிப்பாக 16, 17, 2, ஆகிய வார்டு பகுதிகளில் காலி இடங்கள் அதிகமாக இருப்பதால் தேங்கிய மழைநீர் வடிகால் வாயிலாகவும் மின் மோட்டார் மூலமாகவும் அகற்றப்பட்டு வருகிறது. மற்றப்பகுதிகளில் மழைவெறித்ததும் மழைநீரும் வடிந்தோடுகிறது. இந்த பகுதியை பொறுத்தவரை கோரம்பள்ளம் குளம் நிரம்பி 12 கிலோ மீட்டர் தூரம் உப்பாற்று ஓடை வழியாக கடலுக்கு செல்கிறது. புறநகர் பகுதியிலிருந்து ஊருக்குள் வரும் காற்றாற்று தண்ணீரையும் கண்காணித்து அடுத்த ஆண்டு ஜனவரி முதல்வாரம் வரை வடகிழக்கு பருவமழை இருக்கும் முழுமையாக எல்லா பகுதிகளிலும் கண்காணித்து வருகிறோம். உப்பளத்தை ஒட்டியுள்ள பொன்னாண்டிநகர் மற்றும் கோயில்பிள்ளைநகர் குடியிருப்பு பகுதியில் தண்ணீர் தேங்குவதாக தகவல் வந்ததையொட்டி அதையும் முறைப்படுத்தியுள்ளோம். அனைத்து பகுதிகளிலும் பாரபட்சமின்றி நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம். எந்த மழை வந்தாலும் அதை சமாளித்து எதிர்கொள்வதற்கு மாநகராட்சி அதிகாரிகள் முதல் அலுவலர்கள் வரை 24 மணி நேரமும் கண்காணிப்பில் இருக்கிறோம். என்று மேயர் ஜெகன் பெரியசாமி பேசினார்.

கூட்டத்தில் கவுன்சிலர்கள் சரவணகுமார், போல்பேட்டை பகுதி பிரதிநிதிகள் பிரபாகர், ஜேஸ்பர், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (26.11.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு மாவட்டம், அரச்சலூர் ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் உள்ள தீரன் சின்னமலை திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு,வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கே.இ. பிரகாஷ், மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி. செந்தில்பாலாஜி, வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாசலம், ஈ.ஆர். ஈஸ்வரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். கந்தசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (26.11.2025) ஈரோடு சுற்றுலா மாளிகையில், டிசம்பர்3 இயக்கத்தின் துணைப் பொதுச் செயலாளர் ஜெயபிரகாஷ், ஃபீனிக்ஸ் மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் செயலாளர் மணிகண்டன், துணைச்செயலாளர் முருகன் மற்றும் நம்பியூர் பஞ்சாயத்தில் வார்டு கவுன்சிலராக நியமிக்கப்பட்டிருக்கும் ராதிகா ஆகியோர்சந்தித்து, மாற்றுத்திறனாளிகளின்நல்வாழ்விற்காகதமிழ்நாடுஅரசுபல்வேறுநலத்திட்டங்களைசெயல்படுத்தி வருவதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (26.11.2025) ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறைஅமைச்சர்மருத்துவர்மா.மதிவேந்தன், மனிதவளமேலாண்மைத்துறைஅமைச்சர்என்.கயல்விழிசெல்வராஜ், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.கந்தசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் கனமழையால் மழைநீரில் பாதிக்கப்பட்ட பகுதிகளை கனிமொழி எம்.பி. ஆய்வு செய்தார்



தூத்துக்குடியில் சமீபத்தில் பெய்த தொடர் கனமழை காரணமாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மழை நீர் புகுந்துள்ளது.

குழந்தைகள் வார்டு பகுதி, குழந்தைகள் வார்டு தீவிர சிகிச்சை பகுதி, இரத்த வங்கி மற்றும்பல்வேறு வார்டு பகுதிகளில்மழைநீர்தேங்கியது. இதனால் நோயாளிகள் கடும் அவதி அடைந்துள்ளனர்.

இந்த நிலையில்,கனமழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை திமுக துணைப் பொதுச் செயலர் கனிமொழி எம்.பி. நேற்று ஆய்வு செய்தார். பின்னர், அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ள பாதிப்புகள் குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.மாவட்டம் முழுவதும் பொதுமக்கள் தங்குவதற்காக 97 புகலிட மையங்கள் தயாராக உள்ளன. அணைகளில் இருந்து மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

கரையோர மக்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. அதிக மழை பெய்தாலும், பாதிப்பு ஏற்படாத வகையில் அணைகளில் தண்ணீர் அளவு கண்காணிக்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் எப்பகுதியில் ஆறு, குளங்களில் உடைப்பு ஏற்பட்டாலும், அவற்றை சரி செய்ய 30,000 மணல் மூட்டைகள் தயாராக உள்ளன. மக்கள் வசிக்கும் பகுதிகளில் தண்ணீர் புகுந்து விடாதபடி அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளன.

எஸ்.ஐ.ஆர். பணியை அவசர கதியில் செய்து கொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் வாக்குச்சாவடி அலுவலர்களே மனரீதியாக, உடல்ரீதியாகபாதிக்கப்படக்கூடிய நிலை உள்ளது. 6 மாதங்களில் செய்ய வேண்டியபணியை,எதற்காக இவ்வளவு அவசரமாக செய்கிறார்கள் என்பது தான் கேள்வி என்றார். அப்போது, வடக்கு மாவட்ட திமுக செயலரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சருமான பி. கீதா ஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (26.11.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, ஜெயராமபுரத்தில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதி சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச்சிலையைதிறந்துவைத்தார்.இவ்விழாவில்நகராட்சிநிர்வாகத்துறைஅமைச்சர்கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கே.இ. பிரகாஷ், மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி. செந்தில்பாலாஜி, வி.சி. சந்திரகுமார்,ஏ.ஜி.வெங்கடாசலம்,ஈ.ஆர்.ஈஸ்வரன்,ஆதிதமிழர்பேரவையின்நிறுவனத்தலைவர்அதியமான்உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின்தலைவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். கந்தசாமி,தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, துணைத் தலைவர் கனிமொழி பத்மநாபன், மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (26.11.2025) ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 235 கோடியே 73இலட்சம்ரூபாய்செலவிலான790முடிவுற்றபணிகளைதிறந்துவைத்து,91கோடியே09இலட்சம்ரூபாய்மதிப்பீட்டிலான 23 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கே.இ. பிரகாஷ், கே. சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி. சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். கந்தசாமி, ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (26.11.2025) ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 1,84,491 பயனாளிகளுக்கு 278 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கே.இ. பிரகாஷ், கே. சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி. சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். கந்தசாமி, ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் (26.11.2025) நேற்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, ஜெயராமபுரத்தில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதி சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்தார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (26.11.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, ஜெயராமபுரத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்து, மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள் வரதராஜன், முருகன், வீரன், பழனிச்சாமி, ராஜன் ஆகியோருக்கு சால்வை அணிவித்து சிறப்பு செய்தார்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.